### நாமக்கல் பலபட்டறை மாரியம்மன் கோயில் பூசாரியை மிரட்டி

# கருவறையில் முதல்வர் விஜய் படத்தை வைத்து பூஜை!

## த.வெ.க.வினர் அட்டகாசம்!

நாமக்கல், ஜூன் 27-
நாமக்கல் நகரின் மையப் பகுதியில் பலபட்டறை மாரியம்மன் கோயில் உள்ளது. இந்த கோயிலில் அனைத்து சமூகத்தினருக்கும் சாதி பாகுபாடு இன்றி வழிபாடு செய்து வருகின்றனர்.

இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுபாட்டில் இந்த கோயில் உள்ள இக்கோயிலில் கடந்த 22 ஆம் தேதி தமிழ்நாடு முதல்வர் விஜய்யின் பிறந்த நாளை முன்னிட்டு, தவெகவினர் கோயிலின் கருவறையில் விஜய்யின் படத்தை வைத்து பூஜை செய்தது தற்போது தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. விஜய்யின் பிறந்ததினத்தையொட்டி, தவெகவினர் விஜயின் போட்டோவுடன் கோயிலுக்கு சென்றுள்ளனர். அந்த போட் டோவை அம்மன் சிலை உள்ள கருவறை யில் வைத்து பூஜை செய்யும்படி, கோயில பூசாரி வெங்கடேசிடம் கூறியுள்ளனர். இதற்கு அவர் தயங்கியுள்ளார்.

பின்னர் தவெகவினர் எந்த பிரச்சினையும் வராது, நாங்கள் பார்த்து கொள்கிறோம் என கூறியுள்ளனர்.

இதனால் கருவறையில் விஜய்யின் படத்தை வைத்து பூசாரி வெங்கடேசன், விஜய்யின் நட்சத்திரத்தை குறிப்பிட்டு அர்ச்சனை செய்துள்ளார். பின்னர் தீபாரதனை காட்டப்பட்டு முதல்வரின் படம் கருவறையில் இருந்து எடுக்கப்பட்டு கட்சியினரிடம் பூசாரி கொடுத்துள்ளார்.

இது பக்தர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. கோயில் கருவறையில், பூஜை பொருட்கள் மட்டுமே கொண்டு செல்ல அனுமதி உண்டு. அர்ச்சர்களை தவிர வேறு யாரும் கருவறைக்குள் செல்லமுடியாது.

நாமக்கல் பலபட்டறை மாரியம்மன் கோயிலில் ஆகம விதிமுறைகளை மீறி, முதல்வர் விஜய்யின் படம் வைத்து பூஜை செய்யப்பட்டது.

கேள்வி குறியாக்கும் வகையில், தவெகவினர் நாமக்கல் பலபட்டறை மாரியம்மன் கோயிலில் நடந்து கொண்டது பக்தர்களை அதிர்ச்சியில் தள்ளியுள்ளது.

இந்த வீடியோ காட்சிகள் வெளிவந்த உடன். இந்து சமயஅறநிலையத்துறை அதிகாரிகள், கோயில் பூசாரி வெங்கடேசை அழைத்து கேட்டுள்ளனர். அதற்கு அவர், கட்சியினர் மிரட்டியதால் என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. அவர்கள் கூறியபடி பூஜை செய்து முடித்தேன் என தெரிவித்துள்ளார்.

பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களின் பிறந்ததினத்தையொட்டி, கட்சியினர் இந்த கோயிலிலில் வழிபாடு செய்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குவது வழக்கம். ஆனால் இதுபோல கருவறையில் தலைவர்களின் படத்தை வைப்பது இல்லை என கோயில் பூசாரிகள் தெரிவித்தனர்.




# த.வெ.க. அரசுக்கு எதிராக விவசாயிகள் கொந்தளிப்பு!

முதல் பக்கத் தொடர்ச்சி

விவசாயிகள் நலன் காக்கும் கூட்டம் போராட்ட அரங்கமாக மாறியது.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கவிதா தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள், திடீரென கருப்பு பேட்ஜ் அணிந்து தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். விவசாயக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வதாக அறிவித்த அரசின் வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படாததால், கடும் அதிருப்தியடைந்த விவசாயிகள் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

"விவசாயிகள் நலன்" என்று விளம்பரங்களில் பெருமை பேசும் அரசு, நிஜத்தில் விவசாயிகளின் வேதனையை கேட்கத் தயாராக இல்லை என்றும், கடன் சுமையால் விவசாயிகள் நாளுக்கு நாள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு வருவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம்சாட்டினர்.

**எங்கள் வயிற்றுப் போராட்டம்!**

செய்தியாளர்களிடம் பேசிய விவசாயிகள், "எதிர்க்கட்சிகள் தூண்டிவிட்டதால் போராட்டம் நடத்துகிறோம் என்ற அரசுத் தரப்பின் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது. இது எங்கள் வயிற்றுப் போராட்டம். எந்த அரசியல் கட்சியின் தூண்டுதலும் இல்லை. அரசு சொன்ன வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பதே எங்களின் ஒரே கோரிக்கை" என்று தெரிவித்தனர்.

விவசாயிகளின் கண்ணீரைத் துடைப்போம் என்று கூறி ஆட்சிக்கு வந்தஅரசு, இன்றுஅதேவிவசாயிகளை கருப்பு பேட்ஜ் அணிந்து ஆட்சியர் அலுவலகத்தில் தரையில் அமர்ந்து போராடும் நிலைக்கு தள்ளியிருப்பது வேதனைக்குரியது" வாக்குறுதி கொடுத்தது அரசு;

வாக்குறுதியை நினைவூட்ட போராடுவது விவசாயிகள்! இதுதானா த.வெ.க. ஆட்சியின் விவசாயி நலன்?" என்ற கேள்வி திருவள்ளூர் மாவட்டம் முழுவதும் எதிரொலிக்கிறது.

### 'பேனரில் யார் பெயர் முதல்?' - த.வெ.க. அமைச்சர் சண்டை!

# மக்கள் பிரச்சினை முக்கியமா?... பேனரில் பெயர் முக்கியமா?

## மக்கள் பிரச்சினையில் எப்போது கவனம் செலுத்துவீர்கள்?

விருதுநகர், ஜூன். 27-
தமிழ்நாடு முழுவதும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, மின்வெட்டு, குடிநீர் தட்டுப்பாடு என பல பிரச்சனைகள் இருக்கும் நிலையில், பேனரில் யார் பெயர் முதலில் இடம்பெறுவது குறித்து த.வெ.க. அமைச்சர் சண்டையிட்ட நிகழ்வு நடந்துள்ளது.

விருதுநகரில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிக்காக வைக்கப்பட்ட பேனரில் முதலில் அமைச்சர் கீர்த்தனா பெயரும், அதற்கு கீழ் அமைச்சர் ஜெகதீஸ்வரி பெயரும் இடம்பெற்றிருந்தது. நிகழ்ச்சியில் பங்கேற்ற அமைச்சர் ஜெகதீஸ்வரி, பேனரில் அமைச்சர் கீர்த்தானாவின் பெயர் முதலில் இடம் பெற்றதற்கு எதிர்ப்பு தெரிவித்து கோபமடைந்தார். யாரை கேட்டு அமைச்சர் கீர்த்தனாவின் பெயரை முதலில் குறிப்பிட்டீர்கள் என்று அதிகாரிகளை கடிந்துகொண்டார்.

இதையடுத்து, அமைச்சர் ஜெகதீஸ்வரியை மாவட்ட ஆட்சியர் சமாதானப்படுத்தினார்.

தமிழ்நாட்டில்த.வெ.க. அரசு அமைந்ததில் இருந்து தமிழ்நாட்டில் எண்ணற்ற பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது, மின் வெட்டு, தண்ணீர் பிரச்சனை தலைவிரித்தாடுகிறது. டெல்டா விவசாயிகள் வறட்சியில் வாடுகின்றனர். இதைப்பற்றி எல்லாம் அக்கறை கொள்ளாமல் பேனரில் பெயர் இடம்பெறுவதுதான் த.வெ.க. அமைச்சர்களுக்கு முக்கியமா? என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# 'டாஸ்மாக்ல பாட்டிலுக்கு 20 ரூபா வாங்கிட்டுதான் இருக்காங்க!'

## மதுவிலக்குத் துறை அமைச்சரே ஒப்புதல்!

பழநி, ஜூன். 27-
திண்டுக்கல் மாவட்டம், பழநியில் மதுவிலக்கு துறை அமைச்சர் விக்னேஷ் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: டாஸ்மாக்கில் அனைத்து பக்கமும் பாட்டிலுக்கு ரூ.10, ரூ.20 கூடுதலாக வசூலிப்பதாக குற்றச்சாட்டுகள் உள்ளன. அந்த தவறுகள் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதெல்லாம் வெளியில் தெரியும் உலகிற்கு அவர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் தெரிவதில்லை. ஒரு வேளை நான் சொல்லாமல் இருக்கிறேனா?.

தினமும் பத்திரிகையாளர்களை சந்தித்து இன்று இந்த கடை ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்க வேண்டிய சூழல் உள்ளது. கூடுதலாக பணம் பெறுவதாக புகார் வந்தால், அதன் மீது நிச்சயம் நடவடிக்கை இருக்கும். டாஸ்மாக் ஊழியர்களின் கோரிக்கையும் நியாயமானதுதான். ரூ.11 ஆயிரத்தை கொண்டு வாழ்க்கை நடத்துவது சிரமம் என்கின்றனர். ஆனால், சொந்த நிறுவனமாக இருந்தால் கூடுதல் ஊதியத்தை உடனடியாக வழங்கி விடலாம்.

அரசு நிர்வாகம் என்பதால் ஒரு முறை உள்ளது. டாஸ்மாக் ஊழியர்களின் ஊதிய உயர்வு பரிசீலனையில் உள்ளது. டாஸ்மாக்கை தனியாருக்கு வழங்கும் எண்ணமில்லை. அடிக்கடி கேட்பதால் எங்களுக்கு ஒரு யோசனை வரத்தான் செய்கிறது. எங்களது பரிசீலனையில் அது இல்லை. இன்னும் 2 முறை கேட்டால் அது குறித்து யோசிப்பேன். டாஸ்மாக் துறையே ஒரு வெள்ளை அறிக்கைதான். அதில் உள்ள அனைத்தும் வெளிப்படையாக தெரிகிறது. இவ்வாறு கூறினார்.

★ அமைச்சர்கூட்டத்தில் 'பவர் கட்'

பழநி தாலுகா அலுவலகத்தில் நேற்று முன்தினம் வருவாய் தீர்வாயம் நிகழ்ச்சியில் அமைச்சர் விக்னேஷ் பங்கேற்று, பொதுமக்களிடம் மனுக்களை பெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கலெக்டர் துர்காமூர்த்தி மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர். அமைச்சர் மனுக்கள் பெறும் அரங்கில் நுழைந்த நிலையில் மின்சாரம் திடீரென துண்டிக்கப்பட்டது. 30 நிமிடங்களுக்கும் மேல் மின்சாரம் வரவில்லை. மேலும் மனுக்கள் பெறும் அரங்கிற்குள் தவெக நிர்வாகிகள் திமுதிமுவென நுழைந்தனர்.

மின்விசிறிகள் ஓடாத நிலையில் கடுமையான கூட்ட நெருக்கடி ஏற்பட்டதால், அமைச்சரிடம் மனுக்கள் கொடுப்பதற்காக காலை முதல் நீண்ட வரிசையில் காத்திருந்த பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். கூட்டத்திற்குள் தவெக நிர்வாகிகளும் முண்டியடித்து வந்ததால் கடும் நெருக்கடி நிலவியது. இதனால் ஆங்காங்கே வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அரசு நிகழ்ச்சியில் த.வெ.க.வினர் இச்செயல் பொதுமக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

### திருவாரூர் வந்த

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் தலைமையில் கழகத்தினர் அளித்தனர்!

திருவாரூர், ஜூன் 27-
கழகத்தலைவர் , திராவிடமாடல் ஆட்சியின் பிதாமகர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,முன்னாள் அமைச்சரும், கழக விவசாய அணி மாநில தலைவருமான உ.மதிவாணன் அவர்களின் இல்லத் திருமண நிகழ்விற்கு வருகைதந்து மணமக்கள் மதி.கதிரவன் த.மௌனிகா ஆகியோரின் திரு மணத்தை தமது திருக்காரங்களால் சிறப்போடு நடத்தி வைத்தார்.

இந்த திருமண நிகழ்விற்கு கழகப் பொருளாளர் டி .ஆர்.பாலு எம்.பி , கழக முதன்மைச் செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு , கழக துணைப்பொது செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா , ஆர். முத்தரசன் (சிபிஐ),முன்னாள் அமைச்சர்கள் முனைவர் கோவி.செழியன், சிவி.கணேசன் , நாடாளுமன்ற உறுப்பினர்கள் ச. முரசொலி, வை.செல்வ ராஜ் (சிபிஐ) சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா முருகன், துரை.சந்திரசேகரன், கா.மாரிமுத்து (சிபிஐ) மாவட்ட செயலாளர் கௌதமன், மாநில இளைஞரணி துணை செயலாளர் நா.இளையராஜா அந்தியூர் சிவா தஞ்சை முன்னாள் மேயர் சன்.ராமநாதன், ஜெகவீ ரபாண்டியன், எஸ்.கே.வேதரத்தினம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பித்தனர்.

திருவாரூர் வந்திருந்த கழகதலைவர் , திராவிடமாடல் ஆட்சியின் பிதாமகர் மு.க.ஸ்டா லின் அவர்களுக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி. கே.கலைவாணன் அவர்களின் தலைமையில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த வரவேற்பு நிகழ்வில் முன்னாள் அமைச்சர்கள் உ.மதிவாணன், டி. ஆர்.பி.ராஜா,மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பி.ராஜ மாணிக்கம், ப.ஆடல ரசன், அவைத்தலைவர் க.தன்ராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ். கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்திபாஸ்கர்,மு. வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தலையாமங்கலாம் ஜி.பாலு, ஆடலரசன் ஞானசேகரன், த. செல்வம், த. கணபதி, பொதுக்குழு உறுப்பினர்கள் கலியபெருமாள், டி. செந்தில், கே. எஸ். எஸ். தியாகபாரி, பிரித்விராஜ், கமாலுதீன், ஆர்.முருகேசன், ராஜபூபாலன், காஞ்சித்துரை, செல்வா. ஜெயதேவன், கலைவாணி மோகன்.

ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன் , ஆர்.பாலச்சந்திரன், சேகர கலியபெருமாள், புலிவலம் ஏ. தேவா,கொ.தெட்சிணாமூர்த்தி, எஸ்.ஜோதிராமன், பா.பிரபாகரன், வே. மனோகரன், கேப்டன். செல்வராஜ், டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, ஐ.வி.குமரேசன், வி.எஸ்.ஆர். தேவதாஸ், பால.ஞானவேல், இரா. மனோகரன், ப.பிரகாஷ், கே.வி.கே.ஆனந்த் . நகர செயலாளர்கள் வீரா. கணேசன், ஆர்.எஸ்.பாண்டியன், பா.சிவ நேசன், ஏ.

### "கல்வி நிலையத்திலும் த.வெ.க. ஆணவ அரசியல்"

# கட்டணம் கேட்ட பள்ளி நிர்வாகத்திடம் ரகளை செய்ததாக நிர்வாகி மீது புகார்!

## பள்ளி வாசலில் காரை குறுக்கே நிறுத்தி அராஜகம் – பொதுமக்கள் அச்சம்!

திருவள்ளூர், ஜூன் 27-
திருவள்ளூர் அருகே காஞ்சிபாடி பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் பள்ளியில் கல்விக் கட்டண விவகாரத்தை முன்னிட்டு த.வெ.க. நிர்வாகி ஒருவர் அராஜகத்தில் ஈடுபட்டதாக கூறப்படும் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பள்ளியில் பயிலும் தனது உறவினர் மாணவரின் கல்விக் கட்டணமாக சுமார் ரூ.13 ஆயிரம் நிலுவையில் இருந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில், மாணவருக்கு மாற்றுச் சான்றிதழ் (டி.சி.) வழங்க வேண்டும் என வலியுறுத்தி த.வெ.க. நிர்வாகியான ராஜேஷ் என்பவர் பள்ளிக்குச் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்போது, கல்விக் கட்டணத் தொகையை செலுத்த முடியாது என்றும், உடனடியாக மாற்றுச் சான்றிதழை வழங்க வேண்டும் என்றும் பள்ளி நிர்வாகத்திடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக கூறப்படு கிறது. இதனைத் தொடர்ந்து பள்ளி வளாகம் மற்றும் அதன் நுழைவாயில் பகுதியில் பரபரப்பான சூழல் நிலவியதாகவும், பள்ளி நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்களிடம் கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் புகார் எழுந்துள்ளது.

இதுமட்டுமின்றி, பள்ளி வாசலின் முன்பாக தனது காரை குறுக்கே நிறுத்தி மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் சிரமப்படும் படி செயல்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் பள்ளிக்கு வந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கடும் அவதிக்குள்ளானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கல்வி நிலையங்கள் என்பது மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்கும் புனிதமான இடங்களாகக் கருதப்படுகின்றன. ஆனால், அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி பள்ளி நிர்வாகங்களை மிரட்டும் போக்கு அதிகரித்து வருவதாக சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். கல்வி நிறுவனங்களுக்குள்ளேயே இத்தகைய அழுத்த அரசியல் நடைபெறுவதாக எழும் குற்றச்சாட்டு கள் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த சில மாதங்களாக திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் த.வெ.க. நிர்வாகிகள் தொடர்பான சர்ச்சைகள், மிரட்டல் புகார்கள் மற்றும் அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பதாக எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டுகின்றனர். இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நிகழ்வதால் பொதுமக்களிடையே அச்ச உணர்வு அதிகரித்து வருவதாகவும் அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

# ஆவடி நேரு பஜாரில் தீ விபத்து -ஜவுளிக் கடை பாதிப்பு!

## முன்னாள் அமைச்சர் சா.மு.நாசர் நேரில் பார்வையிட்டு மீட்புப் பணிகளை கேட்டறிந்தார்!

திருவள்ளூர், ஜூன் 27;
திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நேரு பஜார் பகுதியில் அமைந்துள்ள தனியார் ஜவுளிக் கடையில் எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டது. தீ மளமளவென பரவியதால் கடையில் இருந்த ஜவுளிப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் எரிந்து நாசமாகின. இந்த விபத்தில் சுமார் ரூ.1 கோடி மதிப்பிலான பொருட்கள் சேதமடைந்ததாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

தகவல் அறிந்ததும் முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீ விபத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் பார்வையிட்டார். மேலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் எவ்வாறு நடைபெற்று வருகின்றன என்பது குறித்து கேட்டறிந்தார்.

பாதிக்கப்பட்ட கடை உரிமையாளருக்கும், ஊழியர்களுக்கும் ஆறுதல் தெரிவித்த அவர், தேவையான அனைத்து உதவிகளும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு நிலைமையை முழுமையாகக் கட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது ஆவடி மாநகர மேயர் உதயகுமார், ஆவடி மாநகர திமுக பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி கழகச் செயலாளர்கள் ஜி. ராஜேந்திரன், ஜி. நாராயண பிரசாத், ஆவடி பாலா, சத்யா கோ. ரவி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உடனிருந்தனர். தீயணைப்புத் துறையினர் தீயை முழுமையாகக் கட்டுப்படுத்தி, சேத விவரங்களை கணக்கிடும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டனர்.




திருவள்ளூர் மாவட்டம் ஆவடி நேரு பஜாரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட தனியார் ஜவுளிக் கடையை முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் நேரில் பார்வையிட்டு, மீட்புப் பணிகள் குறித்து கேட்டறிந்தார். உடன் ஆவடி மாநகர மேயர் உதயகுமார், மாநகர தி.மு.க. பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி கழகச் செயலாளர்கள் ஜி. ராஜேந்திரன், ஜி. நாராயண பிரசாத் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### போடி நாயக்கனூர் தொகுதி

# முன்னாள் எம்.எல்.ஏ. சுருளிவேல் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, ஜூன் 27-
போடி நாயக்கனூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுருளிவேல் அவர்களின் மறைவுக்கு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

மொழிப்போரில் பங்கெடுத்தவரும், நெருக்கடி நிலைக் காலத்தில் மிசா சிறைவாசம் மேற்கொண்டவருமான போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதியின் முன்னாள் உறுப்பினர் சுருளிவேல் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.